
சிலையும் குருவியும்

சு. நடராஜன்



சிலையும் குருவியும்



எழுதியவர்:

ஆஸ்கார் வைல்டு

சொல்லியவர்:

திருமயம் சு. நடராஜன்

சக்தி காரியாலயம்

சென்னை - 14.

1

ஒரு பெரிய பட்டணம். அங்கே உயரமான ஒரு ஸ்தூபி. அதன் உச்சியில் ராஜகுமாரன் உருவச் சிலை ஒன்று இருந்தது. அது ரொம்ப அழகான சிலை. சிலையின் உடம்பெல்லாம் தங்கத் தகடு. அருமையான சொக்கத் தங்கத்தால் செய்த தகடு. பார்த்தால் பளபளவென்று மின்னும். சிலையின் கண்கள் இரண்டிலும், இரண்டு விலை உயர்ந்த நீலக் கற்கள். உடை வாளின் கைபிடியிலே ஒரு பெரிய சிகப்புக் கல். பார்த்தால் தக தக வென்று சொலிக்கும்.

சிலையின் அழகைப் பார்த்தவர்கள், சொக்கிப் போவார்கள். ஒரு நாள், நகரசபை அங்கத்தினர் ஒருவர் அங்கே வந்தார். சிலையைப் பார்த்தார். “இது காற்றாடி மாதிரி எவ்வளவு அழகாயிருக்கிறது; ஆனால் காற்றாடிமாதிரி இது உபயோகப் படாது” என்று சொன்னார்! கலாரசிகர் என்று

தனக்குப் புகழ் வரவேணும் என நினைத்து, அவர் அப்படிச் சொல்லி யிருக்கக்கூடும். உண்மையில், அவருக்குக் கலையைப்பற்றி ஒன்றுமே தெரியாது!

ஒரு வீட்டில் ஒரு சிறு பையன். சந்திரனைப் பார்த்தான்: "அதைப் பிடித்துத் தா" என்று அம்மாவிடம் கேட்டு, அழுதான். அம்மா கெட்டிக்காரி; புத்திசாலி. என்ன சொன்னாள் தெரியுமா? "அதோ, அந்த சிலையில் இருக்கும் இளவரசனைப் பார்! அவன் அழாமல் எப்படி சந்தோஷமாய் இருக்கிறான்! நீயும் அவன் மாதிரி சிரித்துக் கொண்டிருந்தால், உன்னையும் நல்ல பிள்ளை என்பார்கள். அவன் சொப்பனத்திலே கூட எதையும் கேட்டு அழுவதில்லை" என்றாள்.

மனம் சலிப்படைந்த ஒருவன், சிலை யிருந்த இடத்திற்கு வந்தான். அற்புதமான அந்தச் சிலையை ரொம்பநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தான். "கஷ்டம் நிறைந்த இந்த உலகத்திலே, யாரோ இவர் ஒருவராவது திருப்தியோடு இருந்தாரே. அதற்காக நான் சந்தோஷப்படு

கிறேன் " என்று சொல்லி, மனதைத் திடப்படுத்திக் கொண்டான்.

கிறிஸ்தவக் குழந்தைகள் சிலர். பள்ளிக் கூடத்தில் படிக்கிறவர்கள். பகட்டான சட்டைகளைப் போட்டுக்கொண்டு, தினம் மாதா கோவிலுக்குப் போவார்கள். வணங்கிவிட்டு வீடு திரும்புவார்கள். அந்தப் பிள்ளைகள், சிலைக்கு அருகே வந்ததும், " ஆ, இந்த இளவரசனைப் பார்த்தால், தேவதூதனைப் போல இருக்கிறதே " என்பார்கள். இதைக் கேட்டுக் கொண்டிருந்தார் அந்தப் பிள்ளைகளின் கணக்கு வாத்தியார். அவருக்குப் படு கோபம் வந்து விட்டது. " பிள்ளைகளே ! நீங்கள் தேவ தூதனைப் பார்த்ததில்லையே. சிலை அவனைப்போல் இருக்கிறதென்று எப்படிச் சொன்னீர்கள் ?" என்று கேட்டார். " ஐயா ! நாங்கள் தேவ தூதனை, கனவில்தான் கண்டிருக்கிறோம் " என்றார்கள் பிள்ளைகள். இதைக் கேட்டதும், கோபத்தால் புருவத்தை நெளித்தார் உபாத்தியாயர். யாராவது கனவு கண்டதாய் சொன்னால் உபாத்தியாயருக்குப் பிடிக்கவே பிடிக்காது.


2

ஒரு நாள் ராத்திரி. தலையிலாங்குருவி ஒன்று ஆற்றங் கரையிலிருந்து நகருக்குப் பறந்து வந்தது. நகரத்தின் மேலே, உயரத்தில் வட்ட மிட்டுக் கொண்டிருந்தது. இந்தக் குருவிக்கு ஏராளமான கூட்டாளிகள் உண்டு. இரண்டு மாதத் திற்கு முன்னால்தான் அவைகள் எல்லாம் எகிப்து தேசத்திற்குப் பறந்து போய்விட்டன. இந்த ஒரு குருவி மாத்திரம், கூட்டாளிகளுடன் போக வில்லை. காரணம் என்ன தெரியுமா? இந்தக் குருவிக்கு, ஆற்றில் முளைத்திருக்கும் அழகான நாணலில் மேய ரொம்ப மோகம். வசந்த காலத் தில் ஒரு நாள், பெரிய தட்டாரப் பூச்சி ஒன்று பறந்துகொண்டிருந்தது. அந்தப் பூச்சியைப் பார்த்து விட்டது குருவி. அதைப் பிடித்துச் சாப்பிட நினைத்தது. பின் தொடர்ந்தது. விரட்டி யது. அப்படி பூச்சியை விரட்டிக்கொண்டு வரும்

போதுதான், ஆற்றிலிருந்த நாணலை, குருவி பார்த்தது. நாணலின் தளிர் மேனியில் காதல் கொண்டது. "உன்னை நான் காதலிக்கலாமா?" என்று நாணலைக் கேட்டது. சம்மதிப்பது போல நாணல் தலையாட்டியது. குருவி, தழுவிக்கொள்ளுவதுபோல, நாணலை சுற்றிச் சுற்றிப் பறந்தது. அது, இறக்கைகளை வீசும்போது, அதன் நுனிகள் தண்ணீரைத் தொட்டன. தொட்டதும் தண்ணீரில் வெள்ளிச் சுழல் உண்டாயிற்று. குருவிக்கும் நாணலுக்கும் நேசம் வர வர முற்றியது. அந்த நேசம், கோடை காலம் பூராவும் இருந்து வந்தது. இதைப் பார்த்த மற்ற குருவிகள், பரிகாசம் செய்தன. "இது என்ன கேலிக் காதல்! நாணல் காதலியோ ஏழை. அவளிடமோ பணமில்லை. ஆனால் அவளுக்குச் சொந்தக்காரர்களோ, ஏராளமா யிருக்கிறார்கள்" என்று பேசிக்கொண்டிருந்தன. உண்மையில், ஆற்றில் நாணல் ஏராளமாய் மண்டிக் கிடந்தது. அந்த நாணலில் மேயவரும் குருவிகளெல்லாம் குளிர்காலம் ஆரம்பித்தவுடன் வேறு இடங்களுக்கு பறந்து போய்விட்டன. இந்த ஒரு குருவி மாத்தி




ரம் எங்கும் பறந்து போகவில்லை. தனியே தங்கி
யிருந்தது. இப்படிக் கொஞ்ச நாளாயிற்று. குரு
விக்கு நாணல் காதலியிடம் இருந்துவந்த பிரியம்
கொஞ்சம் கொஞ்சமாய் மறைய ஆரம்பித்தது. ஒரு
நாள் குருவி, காதலியை நினைத்து வருத்தப்பட்டுக்
கொண்டிருந்தது. “நாணல் காதலி என்னுடன்
இப்போது சரியாகப் பேசுவதில்லை. பேச வெட்கப்
படுகிறாள். காற்று வீசும்போது, உஸ் என்று
சீறுகிறாள். அவளோ பெண். அவள் எப்படி
யும் வீட்டில் இருக்க வேண்டியவள்தானே? நான்
ஊரைச் சுற்றித் திரிகிறவன். எனக்கோ, வெளியூர்
சுற்றுவதில் ரொம்பப் பிரியம். நான் பிரயாணம்
செய்தால் காதலி என்னுடன் வரவேண்டாமா?
அதுதானே நியாயம்” என்று தனக்குள், குருவி
முணு முணுத்துக் கொண்டது. கடைசியாக
குருவி, நாணல் காதலியிடம் போயிற்று. “என்னு
டன் கூட வருகிறாயா?” என்று கேட்டது. ‘மாட்
டேன்’ என்பதுபோல, நாணல் தலை அசைத்தாள்.
சொந்த ஜாகையை விட்டு, வேறிடத்துக்குப் போக
நாணல் காதலிக்கு மனமேயில்லை. “என்னை நீ அற்ப




மாக நினைக்கிறாய். நான் இப்பொழுதே எகிப்து தேசக் கோபுரக் காட்சிகளைப் பார்க்கப் போகிறேன். இதோ புறப்பட்டு விட்டேன். எனக்கு விடை தா'' என்று குருவி நாணலைக் கேட்டது. நாணல் காதலி மௌனமாய் இருந்தாள். பிறகு குருவி பறந்து சென்றது. பகல் முழுதும் பறந்தது. ராத்திரி நேரத்திலேதான், நகரத்துக்கு வந்து சேர்ந்தது. அகால நேரமாகிவிட்டது. நகரிலே எல்லாரும் தூங்கிப் போய்விட்டார்கள். எங்கே இறங்கி, தூங்குவதென்று குருவிக்குத் தெரியவில்லை.

இந்தச் சமயத்தில் நகரத்தின் உயரப் பறந்து கொண்டிருந்த குருவி, கீழே பார்த்தது. அங்கே உயரமான ஸ்தூபிக்கு மேலே, சிலை ஒன்று இருப்பதைக் கண்டது. "சரி, இதுதான் நல்ல இடம். தென்றல் காற்றும் இங்கே வீசுகிறது. இங்கே தங்கி, இரவைக் கழிக்கலாம்'' என்று நினைத்தது. சர் ரென்று கீழே இறங்கியது. சிலையின் இரண்டு கால்களுக்கும் நடுவிலே, உள்ள பீடத்தில் உட்கார்ந்தது. அழகான படுக்கைஅறை ஒன்று தனக்குத் தூங்குவதற்கு கிடைத்துவிட்டது என்று நினைத்



தது. தூங்க ஆரம்பித்தது. தூங்குவதற்காக இறகுகளை விரித்து, தலையை உள்ளே இழுத்தது. அவ்வளவுதான் தாமதம். ஒரு சொட்டுத் தண்ணீர் மேலே யிருந்து குருவியின் முதுகிலே விழுந்தது. அதைக்கண்ட குருவி ஆச்சரியப்பட்டது. அப்போது ஆகாயத்தில் ஒரு துளிகூட மேகமில்லை. மப்பு மந்தாரமில்லை. நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அப்படியிருந்தும் மழைத்துளி விழுந்ததின் காரணம், குருவிக்குத் தெரியவில்லை. குருவி அதைப்பற்றி சிறிது சிந்தனை செய்து கொண்டிருந்தது. மறுபடியும் தூங்க ஆரம்பித்தது. இரண்டாந்தரமும் ஒரு சொட்டுத் தண்ணீர் அதன்மேல் விழுந்தது. ஒரு சொட்டு மழையைக் கூட தடுக்க முடியாத அந்த இடம், குருவிக்குப் பிடிக்கவில்லை. மழை ஒழுகாத, புகைப்போக்கி இருக்கிற நல்ல இடமாய் பார்த்துப்போகத் தீர்மானித்தது. உடனே பறந்து செல்ல யத்தனித்தது. மூன்றாந் தரமும் ஒரு சொட்டுத் தண்ணீர் குருவியின்மேல் விழுந்தது. குருவி, மேலே அண்ணாந்து பார்த்தது. திடுக்கிட்டது!



சிலையின் கண்களில் இருந்து, கண்ணீர் ததும்பியது. தாரை தாரையாக, அதன் கன்னங்களில் கண்ணீர் வடிந்துகொண் டிருந்தது. நிலா வெளிச்சத்தில் அது நன்றாகத் தெரிந்தது. சிலையின் முகம் நிலவில் அழகாய் இருந்தது. இதைப் பார்த்ததும், சிலையினிடம் குருவிக்கு ரொம்ப அனுதாபம் ஏற்பட்டுவிட்டது.



3

சிலையை, " நீ யார் ?" என்று கேட்டது குருவி.


" நான் ஒரு இன்பமுள்ள இளவரசன் " என்றது சிலே. " இன்பமுள்ளவன் என்ருல் ஏன் அழுதுகொண்டிருக்கிருய் ? உன் கண்ணீர், என் உடம்பை எல்லாம் நனேத்து விட்டதே ! " என்று சிலேயைக் கேட்டது குருவி.

" நான் உயிருடன் வசித்து வந்தபோது, அதாவது எனக்கு மனித உள்ளமும் உணர்ச்சியும் இருந்து வந்தபோது, கண்ணீர் என்பது இன்ன தென்றே எனக்குத் தெரியாது. இன்ப மாளிகை யில் வசித்து வந்தேன். கஷ்டங்களே அங்கே அணுகக்கூட விடமாட்டார்கள். பகலில் என் சிநே கிதர்களுடன், இன்பமாய் விளேயாடினேன். மாலே நேரங்களில் நடன மண்டபத்தில் நாட்டி யம் ஆடினேன். என் பூந்தோட்டத்தைச் சுற்றி வளேத்து, ஒரு பெரிய சுவர் எழுப்பி விட்டார்கள்.




அந்த சுவருக்கு அப்பால் உலகம் எப்படி இருந்த தென்றே எனக்குத் தெரியாது. நான் தெரிந்து கொள்ளவும் முயற்சிக்கவில்லை. என் கண்ணில் காட்டப்பட்ட தெல்லாம் ரொம்ப அழகாயிருந்தது. அதனுல் என்னை என் சேவகர்கள் "இன்பமுள்ள இளவரசன்" என்று சொல்லுவார்கள். உலகின் சந்தோஷத்தை "இன்பம்" என்று யாரேனும் சொன்னுல், நான் உண்மையில் ஓரளவு சந்தோஷ மாகத்தான் வாழ்ந்தேன். பிறகு கொஞ்ச காலம் கழித்து, நான் இறந்து போனேன். நான் இறந்த பிறகு, எனக்கு இங்கே உயரமான இடத்தில் சிலை செய்து வைத்திருக்கிருர்கள். அது ஏன் தெரியுமா? நான் இந்த உயரத்திலிருந்துகொண்டு, என் நகர மக்கள் படும் துயரம், கஷ்டம், எல்லாவற்றையும் காண வேண்டும் என்பதற்காகத்தானே என்று நினைக்கிறேன். என் ஹிருதயம், ஈயத்தால் செய் தது என்ருலும், நான் கஷ்டங்களைப் பார்த்து கண்ணீர் விட்டு, மனம் உருகாமல் இருக்க முடிய வில்லை" என்று சிலை பதில் சொல்லியது.

குருவிக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது.



"சிலை முழுவதும் தங்கத்தால் செய்ததா? அல்லது ஈயத்தில் செய்து, தங்கத் தகட்டால் மூடப்பட்டதா?" என்று புரியவில்லை. குருவி, ரொம்ப மரியாதையும், அடக்கமும் உள்ளது. அதனுல் சந்தேகத்தை வெளியில் சொல்லி, சிலையிடம் தெரிந்து கொள்ளாமல் சும்மா இருந்துவிட்டது.


சிலை, தன்னுடைய இனிமையான, சன்னக் குரலில் குருவியைக் கேட்டது: "ஏ, குருவியே, குருவியே! இந்த நகரத்தில் வெகு தூரத்துக்கு அப்பால், சிறு வீதி ஒன்று இருக்கிறது. அங்கே ஒரு குடிசை. அந்தக் குடிசையின் ஜன்னல் திறந்திருக்கிறது. நான் இங்கிருந்து பார்த்தால், அந்த அறையில் இருப்பதெல்லாம் எனக்கு நன்ருகத் தெரிகிறது. அறைக்குள் மேஜை ஒன்று கிடக்கிறது. அதன் பக்கத்தில் ஒரு பெண் உட்கார்ந்திருக்கிருள். வறுமையால் அவள் கன்னம் ஒட்டி உலர்ந்திருக்கிறது. அவள் கைகள், வேலை செய்து காய்த்துப் போய், ரத்தம் போல் சிவந்திருக்கின்றன. அவள் ஒரு தையல்காரி. தைக்கும்போது ஊசி குத்திக்குத்தி, அவள்



றுனி விரலெல்லாம் புண்ணாகிவிட்டது. அரண் மனையில் கோஷ்டி நடனம் ஒன்று வைக்கப் போகி ருர்கள். அழகிய ராஜகுமாரிகளும், சீமாட்டிகளும்



அதில் கலந்துகொள்ளுவார்கள். அவர்கள் விலையுயர்ந்த மிருதுவான அங்கி (கவுன்களை) போட்டுக் கொள்வார்கள். அந்த அங்கிகள் சிலவற்றில் சித்திரம் போட்டுக் கொண்டிருக்கிறாள், அந்தத் தையல்காரி. அவள் குடிசைக்குள் ஒரு சிறு அறை இருக்கிறது. அதில் தையல்காரியின் மகன்—ஒரு சிறு பையன்—படுத்துப் புரண்டு கொண்டிருக்கிறான். அவனுக்கு கடும் சுரம் அடிக்கிறது. அம்மாவிடம் சொல்லி, ஆரஞ்சுப்பழம் வாங்கித்தா என்று அழுகிறான். தாய் ஆரஞ்சுப் பழத்திற்கு எங்கே போவாள்? வீட்டில் குடிக்க ஆற்றுத் தண்ணீர்தான் இருக்கிறது. அதைத் தவிர வேறொன்றுமில்லை. பையன், தண்ணீர் வேண்டாம் என்கிறான். அழுகிறான். அதனால், ஏ குருவியே குருவியே, நீ எனக்கு உதவி ஒன்று செய்ய வேண்டும். என் உடைவாளில் பதித்திருக்கும் இந்த விலையுயர்ந்த சிகப்பை எடுத்துக் கொண்டு போ. அதை அவளிடம் கொடுத்து விட்டுவா. நானே போய்க் கொடுப்பேன். அதற்கு என்னால் போக முடியாதபடி, என் பாதங்களை இந்த ஸ்தூபி



யின் பீடத்தில் இறுகக் கட்டி வைத்திருக்கிறார்கள். அதனால் நான் கொஞ்சங்கூட நகர முடியவில்லை. என்ன செய்வேன்? எப்படியாவது இந்த உபகாரத்தைச் செய்ய வேண்டும்" என்று குருவியை மன்றாடிக் கேட்டுக்கொண்டது.

அதற்குக் குருவி, "சிலையே, சிலையே! என் தோழர்கள், நான் வந்துவிடுவேன் என்று, எனக்காக எகிப்தில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நைல் நதியில் அவர்கள் அங்கு மிங்கும் பறந்துபோய், தாமரைப் பூக்களைக் கொஞ்சி விளையாடுவார்கள். எகிப்தில் பல விநோதக் காட்சிகள் இருக்கின்றன. அங்கே ஒரு ராஜாவின் பெரிய சமாதி ஒன்றிருக்கிறது. சமாதிக்குள் ராஜாவினுடைய வர்ணம் பூசிய பிரேதப் பெட்டி ஒன்றுள்ளது. அந்தப் பெட்டிக்குள் ராஜாவின் சவம், பாடஞ் செய்து வாசனை போட்டு வைத்திருக்கிறது. அது மஞ்சள் துணியினால் சுற்றி யிருக்கும். சவத்தின் கழுத்தில் லேசான பச்சை நிறமுள்ள மரகதமாலை ஒன்று போடப்பட் டிருக்கிறது. அந்தச் சமாதியின் கோபுரத்தில் தங்கி, என் சிநேகிதர்கள் தூங்குவார்கள்.



நான் அந்தக் காட்சிகளை எல்லாம் போய்ப் பார்க்க வேண்டும். போய் வருகிறேன்" என்றது குருவி. அதற்கு சிலை, "ஏ குருவியே! குருவியே! நீ ஒரே ஒரு ராத்திரி மட்டும் இங்கே தங்கி, என் தூதனாகப் போய், நான் சொல்லிய காரியத்தை பார்த்துவிட்டு வா. அதன் பிறகு, நீ எகிப்திற்குப் போகலாம். தையல்காரியின் மகன் ரொம்பத் தாகமாய் வருந்துகிறான்" என்றது. அதற்கு குருவி, "சிலையே! சிலையே! எனக்கு பையன்களைக் கண்டால் கொஞ்சங்கூடப் பிடிக்கவே பிடிக்காது. சென்ற வருஷம் கோடைகாலத்தில், ஆற்றோரத்தில் தங்கியிருந்தேன். அந்த இடத்தில் இரண்டு சுட்டிப் பையன்கள் இருந்தார்கள்; அவர்கள் இருவரும் அங்கே தொழிற்சாலை வைத்திருப்பவனின் பிள்ளைகள்; சதா என்னைக் கல்லால் அடிப்பார்கள்; அதில் ஒரு கல்லாவது இதுவரை என்மேல் விழுந்ததில்லை. எங்கள் ஜாதிக் குருவிகளை யாரும் லேசில் கல்லால் எறிந்துவிட முடியாது. கல்லுக்கு எட்டாமல் நாங்கள் அவ்வளவு உயரத்தில் பறந்துபோய் விடுவோம். அதி



லும் எங்கள் குடும்பம், வேகமாய்ப் பறப்பதில் ரொம்ப கியாதி பெற்றது. இருந்தாலும், சின்னப் பையன்கள் என்னை கல்லால் அடிப்பதென்ருல், அது எனக்கு ரொம்ப இகழ்ச்சியாகும். அதனுல் நான் அந்தப் பையன் வீட்டுக்குப்போக நான் இஷ்டப்படவில்லை." என்றது.

இப்படி குருவி சொன்னதைக் கேட்டதும், சிலைக்கு வருத்தம் தாங்க முடியவில்லை. சிலை, குருவிக்காக அனுதாபப்பட்டது. கொஞ்ச நேரம் சென்றது. பிறகு தையல்காரி வீட்டுக்குத் தூது போய் வருவதாக, குருவி ஒப்புக்கொண்டது. 'சிலை அதற்காகக் குருவிக்கு வந்தனம் தெரிவித்தது.

பின்பு குருவி, இளவரசனுடைய சிலையின் உடைவாளில் பதித்திருந்த சிகப்பை, அலகால் கொத்தி எடுத்துக் கொண்டது; தையல்காரி வீட்டிற்குப் புறப்பட்டது. நகரத்தின்மேல் அது பறந்து போனபோது, கிழே பல காட்சிகளை பார்த்துக் கொண்டு சென்றது. பளிங்குக் கற்களால் செய்ததேவதைகளின் சிலைகளை தாங்கிய கோபுரங்களை கடந்து சென்றது. அரண்மனைக்கு மேலே


பறந்து போனபோது, அரண்மனையில் காதலர்கள் நடனமாடிக்கொண்டிருந்த சத்தம் குருவியின் காதில்




விழுந்தது. ஓர் அழகான பெண். தன் காதலனுடன் கைகோர்த்துக்கொண்டு ஒரு மாளிகையின்



உப்பரிகையில் வந்து நின்றாள். இருவரும் மேலே நட்சத்திரங்களைப் பார்த்தார்கள். காதலின் பெருமையை ஒருவருக்கொருவர் பேசி, அளவளாவிக் கொண்டிருந்தார்கள். காதலி சொன்னாள்: "ராஜ சபை கோஷ்டி நடனத்திற்குப் போகவேண்டும்; நான் அணிந்துக்கொள்ள, என் புதிய நடன உடைகள் அதற்குள் தயாராகிவிடும் என்று நினைக்கிறேன். என் அங்கியில் அழகான சித்திரப் பூக்களை போடச் சொன்னேன். தையல்காரிகளோ முழுச் சோம்பேறிகள்" என்றாள். காதலர்களின் உல்லாச வார்த்தைகள் குருவியின் காதில் விழுந்தன. கேட்டுக்கொண்டு குருவி, நதி ஒன்றை கடந்து சென்றது. அங்கே பல கப்பல்கள் நின்றன. கப்பல்களின் பாய் மரங்களில் விளக்குகள் கட்டித் தொங்கிக் கொண்டிருந்தன. அந்த விளக்குகளையும் குருவி பார்த்தது. அதற்கப்பால் ஒருவருக்கொருவர் பேரம்பேசி வியாபாரம் செய்து கொண்டிருந்த யூதர்களைப் பார்த்தது. அவர்கள் பணங்களை செப்புத் திராசுகளில் போட்டு நிறுத்துக்கொண்டிருந்தார்கள். கடைசியாகக் குருவி அந்த ஏழைத்



தையல்காரியின் குடிசைக்குப் போய்ச் சேர்ந்தது. உள்ளே பார்த்தது. அவள் மகன் சுரத்தால் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். தாய் களைத்துப்போய், அவன் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்தாள். குருவி, ஜன்னலின் வழியே குடிசைக்குள் நுழைந்தது. அது அலகில் கொத்தி எடுத்துக் கொண்டுபோன சிகப்புக் கல்லை, அங்கிருந்த மேஜையின்மேல் மெதுவாகப் போட்டது பிறகு, தையல்காரியின் மகனுடைய படுக்கையைச் சுற்றிச் வட்டமிட்டது இறக்கைகளால், அவன் முகத்தில் காற்றுப் படும்படி மெதுவாக வீசியது. பையன் வியர்வை நீங்கி, நிம்மதியாய்த் தூங்கினான்.



4

அதன் பிறகு, சிலையினிடம் குருவி திரும்பிச் சென்றது. நடந்ததை விவரமாய் சொல்லியது: "பேஷ்! நீ சாமர்த்தியமாய் நான் சொன்னதைச் செய்து வந்திருக்கிறாய். இங்கே குளிர் அதிகமாய் இருந்தாலும், இப்பொழுதுதான் என் உடம்பில் வெப்பம் உண்டாகி, சந்தோஷமா இருந்து வருகிறேன். அது எதனால் என்றால், நீ செய்துவந்த நல்ல காரியத்தைக் கேட்ட பிறகு தான்" என்று சிலை, குருவிக்குச் சொல்லியது. இதைக் கேட்டதும், குருவி ஏதோ யோசனை செய்ய ஆரம்பித்தது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தூங்கிப் போய்விட்டது. எந்த விஷயத்தையாவது குருவி சிந்திக்க ஆரம்பித்தால், அதற்கு உடனே தூக்கம் வந்துவிடும்.

பொழுது விடித்தது. குருவி ஆற்றுக்குப் பறந்து போய் குளித்தது. மழைகாலத்தில் அந்த

ஆற்றில் குருவிகள் குளிப்பதென்ருல், ரொம்ப அபூர்வம். ஆற்றுப் பாலத்தின் அடியில் அப் போது நடந்து போய்க்கொண்டிருந்த பட்சி சாஸ் திரி ஒருவர், இந்தக் குருவி மட்டும் மழைகாலத் தில், தனியாக அங்கு வந்து குளிப்பதைப் கவனித் தார். ரொம்ப ஆச்சரியப்பட்டார். அதைப்பற்றி, அங்குள்ள செய்திப் பத்திரிகைக்கு நீண்ட கடிதம் ஒன்று எழுதினுர். எல்லாரும் அந்தக் கடிதத்தை மேற்கோள் காட்டி வெளியிட்டார்கள். அதில் அவ் வளவு அரிய விஷயங்கள் அடங்கியிருந்தன.

அன்றைக்கு ராத்திரியே குருவி, எகிப்திற்குப் போக நினைத்தது. அங்கே போக ரொம்ப உற் சாகமாய் இருந்தது. புறப்பட்டது. வழியில் பல முக்கியமான இடங்களைப் பார்த்தது. நகரத்தில் பொது இடங்களில் இருந்த கல்லறைகளுக் கெல் லாம் போயிற்று. மாதா கோயில் கோபுரத்தில் ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தது. இந்தக் குருவி எங்கே போனுலும், அங்குள்ள குருவிகள் இதைப் பார்த்து, “மிக மதிப்புள்ள விருந்தாளி” என்று ஒன்றுக்கொன்று பேசிக்கொள்ளுவது வழக்கம்.




இதைக் கேட்டதும் இந்தக் குருவிக்கு ரொம்ப சந்தோஷம் உண்டாகிவிடும்.

மறுநாள் ராத்திரி, சந்திரன் உதயமாயிற்று. சிலையைப் பார்க்க, குருவி திரும்பிப் பறந்து போனது. சிலையைப் பார்த்தது. "ஏ சிலையே! நான் எகிப்திற்குப் போகிறேன். அங்கே போவதற்குத்தான் புறப்பட்டு வந்தேன். அங்கு ஏதேனும் உனக்கு வேலைகள் ஆகவேண்டியது இருந்தால் சொல்லு. பார்த்து வருகிறேன்" என்றது. அதற்குச் சிலை, "குருவியே! நீ இங்கே, என்னிடத்தில் இன்னும் ஒரு ராத்திரி மட்டும் தங்கிப் போகக் கூடாதா?" என்று கேட்டது. அதற்குக் குருவி, "சிலையே, எகிப்தில் எனக்காக நண்பர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே போய் பல விநோதக் காட்சிகளை காண்பார்கள். பெரிய நீர் வீழ்ச்சி ஒன்றிருக்கிறது. அது உலகத்திலேயே இரண்டாவது அதிசயம். நாளை என் நண்பர்கள் அந்த நீர்வீழ்ச்சிவரை பறந்துபோய் விடுவார்கள். அங்கே நீர்க்குதிரைகள் கோரைகளுக்கிடையே படுத்திருக்கின்றன. பெரிய கருங்கல் பீடம் ஒன்



றில் 'மெம்மொன்' தன தேவதை உட்கார்ந்திருக்கிறது. அது இரவெல்லாம் விழித்திருந்து நட்சத்திரங்களையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும். துருவ நட்சத்திரம் பிரகாசிக்கும் போது, தன் இனிய குரலால் அருமையாய்ப் பாடும். பிறகு, மௌனமாய் இருக்கும். பகல் நேரத்தில் மஞ்சள் நிறமுள்ள சிங்கங்கள், தண்ணீர் குடிக்க ஆற்றின் கரையோரத்தில் வரும். அவைகளின் கண்களைப் பார்த்தால், மரகதம்போல் சொலிக்கும். சிங்கங்கள் கர்ஜித்தால், சப்தம் அருவியின் முழக்கத்தைக் காட்டிலும் பெரிதாய் இருக்கும்" என்று குருவி சொல்லியது.



5

இதைக் கேட்டது சிலை. "குருவியே! இந்த நகரத்தின் குறுக்கே வெகு தூரத்தில் ஓர் இளைஞன் வசிக்கிறான். அவன் வீட்டில் ஒரு சிறு தாழ்வாரம் இருக்கிறது. அதில்தான் அவன் குடி இருக்கிறான். இங்கிருந்து பார்த்தால், அவன் இருப்பது எனக்கு நன்றாய்த் தெரிகிறது. ஒரு சாய்ந்த மேஜையில் உட்கார்ந்திருக்கிறான். அதில் கடுதாசி போட்டு ஒட்டியிருக்கிறது. அவனுக்குப் பக்கத்தில் ஒரு குவளை இருக்கிறது. அதில், வதங்கிப்போன ஊதா நிற புஷ்பக்கொத்து ஒன்று கிடக்கிறது. அவன் தலைமயிர் செம்பட்டையாயும் சிலுப்பிக்கொண்டும் இருக்கிறது. அவன் உதடுகள் மாதுளைகளைபோல் சிவந்திருக்கும். கண்கள், விசாலமாய் இருக்கும். ஆளைப் பார்த்தால், கனவு காண்பவன்போல் தோன்றும். நாடகசபை நிர்வாகி ஒருவருக்காக, நாடகம் ஒன்றை அவன் எழுதிக்

கொண்டிருக்கிறான். அது முழுதும் எழுதி முடிய வில்லை. அரைகுறையாய் இருக்கிறது. குளிர் அவனை வாட்டுகிறது. அதனால் அந்த நாடகத்தை எழுதி முடிக்காமல் அவதிப்படுகிறான். குளிர்காய அவன் அடுப்பில் நெருப்பில்லை. பசி, அவனை



மூர்ச்சை ஆக்கிவிட்டது” என்று அடையாளம் சொல்லியது.

இதைக் கேட்டதும் குருவிக்கு, இரக்கம் வந்தது : “ சிலையே ! நான் இன்னும் ஒரு ராத்திரி மட்டும் இங்கு தங்குகிறேன். உன் கண்ணில் இருக்கும் மற்றொரு ரத்தினத்தையும் எடுத்துக் கொண்டுபோய், அந்த இளைஞனிடம் கொடுத்து விட்டு வரவா ?” என்று கேட்டது. அதற்குச் சிலை, “ ஐயோ குருவியே! என்னிடம் ரத்தினம் வேறு எதுவும் இல்லையே : என் கண்களே, என்னிடம் மிச்சம், அவற்றில் அபூர்வமான நீலக்கற்கள் பதிக்கப்பட் டிருக்கின்றன. அந்த நீலங்கள் ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னே இந்தியாவிலிருந்து இங்கு கொண்டுவரப் பட்டவை. அவற்றில் ஒன்றை பிடுங்கி எடுத்துக் கொண்டு போய், இளைஞனிடம் கொடுத்துவிட்டு வா. அவன், அந்த நீலத்தை, நகை வியாபாரியிடம் விற்று, உணவும், கணப்புக்கு விறகும் வாங்குவான். அப்புறமாவது சந்தோஷமாய் இருப்பான். நாடகத்தின் குறையையும் எழுதி முடித்து விடுவான்” என்றது.

இதைக் கேட்டதும் குருவிக்கு அழுகை வந்து விட்டது. "சிலையே! நான் இந்தக் காரியத்தை எப்படிச் செய்வேன்? எனக்கு மனம் வரவில்லையே. நான் செய்யமாட்டேன்" என்று சொல்லியது. அதற்குச் சிலை, "குருவியே! நான் சொல்லுவதைத் தட்டாமல் செய்து வா" என்றது.

6

உடனே குருவி, இளவரசனுடைய ஒரு கண்ணைக் கொத்தியது. அதைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு மானவன் இருந்த வீட்டுத் தாழ்வாரத்திற்குப் பறந்து போயிற்று.

அந்த தாழ்வாரத்தின் கூரையில் ஒரு பெரிய துவாரம் இருந்தது. அதன் வழியே, குருவி விருட்டென்று வீட்டிற்குள் பாய்ந்து பறந்து சென்



றது. அறைக்குள் நுழைந்தது. இளைஞன் பசிக் களைப்பால், தன் கைகளின்மேல் தலையைச் சாய்த்து வைத்து தூங்கிக் கொண்டிருந்தான். அதனால் குருவி உள்ளே பறந்து வந்த சப்தம் அவனுக்குக் கேட்கவில்லை. கொஞ்ச நேரம் கழித்து, தலையை தூக்கி, கண்களை விழித்து மேலே அண்ணாந்து பார்த்தான். அழகான நீலம் ஒன்று, தன் பக்கத்தி லிருந்த வாடிய ஊதாப் பூவின் மேல் கிடந்ததைக் கண்டான். சந்தோஷம் அடைந்தான். "சரி, என்னைப் பிறர் மதிக்கும் காலம் வந்துவிட்டது. என் நாடகத்தை மெச்சுகின்றவர் யாரோ ஒருவ ரிடம் இருந்துதான் இந்த நீலம் வந்திருக்க வேண்டும். இனி என் கவலை நீங்கிவிட்டது. இப்பொழுதே இந்த நாடகத்தின் குறையை எழுதி முடித்து விடுகிறேன்" என்று இளைஞன் தனக் குள் சொல்லி சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

7

பிறகு, குருவி திரும்பிப் போய், நடந்ததை சிலைக்குச் சொல்லியது. சிலை குருவிக்கு வந்தனம் தெரிவித்தது. குருவியின் திறமையைப் பாராட்டியது. அடுத்தநாள் குருவி, துறைமுகத்துப் பக்கம் பறந்து சென்றது. அங்கு போய், ஒரு பெரிய கப்பலின் நங்கூரத்தில் உட்கார்ந்தது. கப்பல் மாலுமிகள், பெரிய பெட்டிகளைக் கயிறால் கட்டி மேலே கப்பலுக்குள் இழுத்துக் கொண்டிருந்தார்கள்; ஒவ்வொரு பெட்டியும் கப்பலுக்குள் வந்து சேர்ந்தவுடன் ‘ஆய், ஊய்’ என்று சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். இவற்றை எல்லாம் குருவி, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. “நான் எகிப்திற்குப் போகப் போகிறேன்” என்று கீச்சிட்டுக் கொண்டிருந்தது. இதை அங்கிருந்த மாலுமிகள் யாருமே கவனிக்கவில்லை. இரவு வந்தது. சந்திரன் பிரகாசித்தது. குருவி,

இளவரசன் சிலைக்குப் பறந்து போனது: "நான் எகிப்திற்குச் செல்லவேண்டும். உன்னிடம் விடை பெற்றுக் கொண்டு போகவே இங்கு வந்திருக்கிறேன்" என்று சிலைக்குச் சொல்லியது. அதற்குச் சிலை, "குருவியே! இன்னும் ஒரே ஒரு இரவு மட்டும் என்னுடன் தங்கி இருக்கமாட்டாயா?" என்று கேட்டது. குருவி சொல்லியது: "சிலையே! இனி மழை காலம். குளிரும் பனியும் சீக்கிரம் இங்கே வந்துவிடும். அதனால் நான் தாமதியாமல் எகிப்திற்குப் போகவேண்டும். அங்கே பசுமையான பனைமரங்கள் அதிகம். அந்தப் பனைமட்டைகளின்மேல் உட்கார்ந்திருந்தால், சூரிய வெப்பம் உடம்பில் நன்றாகப்படும். குளிர் இராது. எகிப்தில் நைல் நதியில், முதலைகள் களிமண் அடியில் படுத்துக்கொண்டு, அங்குமிங்கும் சுற்றிப் பார்க்கும். என் சிநேகிதர்களோ, அங்கே இருக்கும் "பால் பெக்" கோவிலில், கூடுகட்டிக் கொண்டு, சுகமாய் வாழ்ந்து வருகிறார்கள். அந்தக் கூடுகளை, வெண்மையும் இளஞ் சிகப்பு நிறமும் கலந்த புறாக்கள் காவல் புரிகின்றன. அதனால், என் அன்புள்ள

இளவரசனே! நான் உன்னை கட்டாயம் விட்டுப் பிரிந்துதான் செல்லவேண்டும். எங்கு போனாலும், நான் உன்னை ஒருபோதும் மறக்கமாட்டேன். அடுத்த வசந்தகாலத்தில் இங்கு திரும்பி வருவேன். வரும்போது, விலையுயர்ந்த இரண்டு ரத்தினங்களைக் கொண்டுவருவேன். உன்னிடம் தருவேன். முன்பு, நீ இரக்கப்பட்டு ஏழைகளுக்குக் கொடுத்த நவரத்தினங்களுக்குப் பதிலாக, நான் கொண்டுவரப் போகும் ரத்தினங்களை வைத்துக்கொள். நான் கொண்டு வருவதாய்ச் சொல்லும் சிகப்பு, சிவந்த ரோஜா புஷ்பத்தைக் காட்டிலும் நல்ல சிகப்பாய் இருக்கும். நீலம், நடுக்கடலில் உள்ள நீரைப்போல், அவ்வளவு நீலநிறமாய் இருக்கும்" என்று சொல்லியது.

8

இதைக்கேட்ட சிலை, "குருவியே! அதோ அந்த சதுக்கத்தில் நெருப்புப் பெட்டி விற்றுக் கொண்டு ஒரு சிறு பெண் நிற்கிறாள். அவள் கையில் வைத்திருந்த நெருப்புப் பெட்டிகளை, சாக்கடையில் கைநழுவிப் போட்டுவிட்டாள். எல்லாம் நனைந்து கெட்டுப்போய்விட்டன. அவற்றை விற்று, காசை வீட்டுக்குக் கொண்டு போகாவிட்டால், தகப்பன் அவளை அடிப்பான். அதை நினைத்து அவள் அழுதுகொண்டு நிற்கிறாள். அவள் கால்களில் ஜோடுகளோ, அல்லது காலுறைகளோ இல்லை. தொப்பி இல்லாமல் வெறுந் தலையுடன் நிற்கிறாள். அவ்வளவு வறுமை. அதனால், இதோ என்னுடைய மற்றொரு கண்ணையும் பிடுங்கி எடுத்துக் கொண்டு போ. அதிலுள்ள நீலத்தை அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு வா. இல்லாவிட்டால், தகப்பன் அவளை அடிப்

பான்" என்று சொல்லியது. இதைக் கேட்டதும் குருவிக்கு மனம் உருகிவிட்டது. சிலையைப் பார்த்து குருவி சொல்லியது, "ஏ சிலையே! இன்னும் ஓரிரவு உன்னிடம் தங்குகிறேன். ஆனால் உன் கண்ணைமட்டும் பிடுங்கிக்கொண்டு போக எனக்கு கொஞ்சங்கூட மனம் வரவில்லை. நீ முழுக் குருடாய் போய்விடுவாய்" என்று சொல்லியது. அதற்குச் சிலை, "நான் உன்னிடம் சொல்லுகிறபடி என் கட்டளையைச் செய்துவா" என்று குருவிக்குச் சொல்லியது.

உடனே குருவி, இளவரசனுடைய மற்றொரு கண்ணையும் பிடுங்கி எடுத்துக் கொண்டு, பறந்து போயிற்று, நெருப்புப் பெட்டி விற்றுக் கொண்டிருந்த அந்தப் பெண் நின்ற விடத்தில், உச்சியில் வட்டமிட்டது. தணிந்து பறந்தது. அவள் கையில் விழும்படி நீலத்தை மெதுவாக நழுவ விட்டது. அந்த நீலத்தை பார்த்தாள், பெண், "ஆகா! இது எவ்வளவு அழகாய் இருக்கிறது" என்று சொல்லி, சிரித்துக் கொண்டு சந்தோஷமாய் வீட்டுக்கு ஓடினாள்.




பிறகு குருவி, இளவரசனிடம் திரும்பி வந்தது. "சிலையே! நீ இப்பொழுது முழுக் குருடாகி விட்டாய். நான் இனிமேல் எங்கும் போக மாட்டேன். உன்னிடத்திலேயே எப்போதும் தங்கி இருக்கப் போகிறேன்," என்று சொல்லியது. அதற்குச் சிலை, "இல்லை, இல்லை, நீ அவசியம் எகிப்திற்குப் போகத்தான் வேண்டும்" என்றது. "நான் எப்போதும் உன்னிடத்திலேயே இருப்பேன் என்று குருவி சொல்லிவிட்டு, அன்று இரவு, சிலையின் காலடிகளிலேயே படுத்துத் தூங்கியது.



9

அடுத்தநாள் பொழுது விடிந்தது. குருவி, விழித்தெழுந்தது. இளவரசன் தோள்களின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டது. பல புதிய நாடுகளில் அது பார்த்து வந்த அதிசயங்களை எல்லாம், ஒன்றுவிடாமல் சிலைக்கு சொல்லிக் கொண்டிருந்தது. நைல் நதி கரை ஓரங்களில் நீலத்தில் வரிசை வரிசையாய் நின்றுகொண்டு, கரையோரங்களில் வந்து மொய்க்கும் பொன் மீன்களை அலகால் கொத்தித் தின்னும் செந்நாரைகளைப் பற்றிச் சொல்லியது. அனாதி காலமாக, எல்லா விஷயங்களையும் அறிந்துகொண்டு பாலைவனத்திலிருக்கும் 'ஸ்பிங்ஸ்' விக்கிரகத்தைப் பற்றிச் சொல்லியது. அம்பர் ஜபமாலைகளைக் கையில் ஏந்திக் கொண்டு, ஒட்டகங்களின் பின்னே மெதுவாக நடந்து செல்லும் வியாபாரிகளைப் பற்றிச் சொன்னது. கருங்காலி மாதிரி கறுப்பாய்


இருந்துக் கொண்டு, வெண்மையான ஒரு பெரிய ஸ்படிகத்தை வணங்கும் சந்திரமலை அரசனைப் பற்றிச் சொல்லியது. பனைமரத்தில் தூங்கும் பெரிய பச்சைப் பாம்பைப் பற்றியும், அதற்குத் தேனால் செய்த இனிப்புப் பணியாரங்களை ஆகாரமாய்க் கொடுக்க இருபது பூசாரிகள் இருப்பதைப் பற்றியும் சொல்லியது. அங்கே ஓர் ஏரி இருக்கிறது. அதில் பெரிய அகலமான இலைமேல் உட்கார்ந்துகொண்டு, அந்த இலையைப் படகு விடும் குள்ள மனிதர்களைப் பற்றிச் சொன்னது. அந்த குள்ளயர்கள், சதா பட்டுப் பூச்சிகளை வேட்டையாடுவதைப்பற்றியும் சொன்னது. இதைக் கேட்ட சிலை, "குருவியே! நீ பல அதிசயமான சங்கதிகளை எல்லாம் எனக்குச் சொல்லிக் கொண்டு வந்தாய். ஆனால் நீ சொன்னது எல்லாவற்றையுங் காட்டிலும், ரொம்ப அதிசயமானது ஒன்று இருக்கிறது. அது என்னவென்றால், உலகில் ஆண்களும் பெண்களும் கஷ்டப்படுவதுதான். துன்பத்தைக் காட்டிலும் கொடுமையான பரம ரகசியம் வேறு இல்லை. என்னுடைய நகரத்துக்கு மீண்டும்



பறந்துபோ; அங்கே சுற்றிப் பார். பிறகு நீ காண்பதை வந்து என்னிடம் சொல்லுவாயா?" என்று குருவியைக் கேட்டது.

குருவி சம்மதித்தது. நகரத்தைச் சுற்றிப் பார்த்துவர பறந்துபோனது. பல காட்சிகளைப் பார்த்தது. பெரிய பணக்காரர்கள், தமது அழகான வீடுகளில் சுகமாகக் காலங்கழிப்பதைக் குருவி கண்டது. அதே சமயத்தில், ஏழை எளியவர்கள், பிச்சைக்காரர்களைப்போல் நகர வாயிலில் ஏங்கி உட்கார்ந்திருப்பதையும் பார்த்தது. இருட்டாயிருந்த சந்துபொந்துகளில் எல்லாம் பறந்து போய்ப் பார்த்தது. அங்கே, பசியால் துவண்டு, வெளுத்துப்போன முகத்துடன் கூடின குழந்தைகள் பாழடைந்த இருண்ட தெருக்களில் இங்குமங்கும் அலைந்து திரிந்து உற்றுப்பார்த்துக் கொண்டிருந்ததையும் கண்டது. ஊர் அருகே ஒரு பாலம் இருந்தது. அதன் கீழே தண்ணீர் ஓடும் வில் வளைவில், இரண்டு சிறு பையன்கள், குளிரும் பனியும் தாங்க முடியாமல், ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு கதகதப்புடன் தூங்கிக் கொண்டிருந்தார்

கள். இதைப் பார்த்தான் அங்கே இருந்த காவல்காரன். சிறுவர்கள் அங்கே இருக்கக்கூடாதென்று அதட்டி மிரட்டி அவர்களை விரட்டி யடித்துவிட்டான். சிறுவர்கள் இருவரும் பயந்து, மழையிலே போய் அடிபட்டு, அலைந்து திரிந்தார்கள். குருவி, இந்தத் துன்பக் காட்சிகளை எல்லாம் பார்த்துவிட்டு, திரும்பிப்போய் சிலையிடம் விவரங்களைச் சொல்லியது.



10

இதைக் கேட்டதும் சிலைக்கு ரொம்ப வருத்தம் உண்டாயிற்று. குருவியிடம் சொல்லியது; "குருவியே! என் உடல் முழுதும் நல்ல தங்கத் தகட்டால் மூடியிருக்கிறது. அதிலிருக்கும் தங்கத்தை ஏடு ஏடாகக் கிழித்துக் கொண்டுபோய், என் ஏழை மக்களிடம் நீ கொடுத்துவிட்டு வா. ஏனென்றால், தங்கம்தான் சந்தோஷத்தைத் தரக் கூடிய பொருள் என்று, உயிரோடு வாழ்பவர்கள் நினைக்கிறார்கள்" என்றது.

சிலை சொன்னதுபோல், அதன்மேல் மூடப் பட்டிருந்த தங்கத்தகட்டை ஏடு ஏடாகப் பிய்த்துக் கொண்டுபோய், ஏழை ஜனங்களிடம் குருவி கொடுத்து வந்துவிட்டது. தங்கம் எடுபட்டதும், சிலையின் நிறம் மங்கியது. சாம்பல் பூத்ததுபோலாயிற்று. தங்கம் கிடைத்தவுடன், ஏழைக்குழந்தைகளின் முகங்கள், ரோஜா புஷ்பம்போல் சந்தோ



ஷத்தினால் சிவந்தன. குழந்தைகள் வீதிகளில் சிரித்து விளையாட ஆரம்பித்தார்கள். பசியாறச் சாப்பிட ரொட்டி கிடைத்துவிட்டதென்று குழந்தைகள் குதூகல மடைந்தார்கள்.

உறைபனி காலம் ஆரம்பித்தது. அப்புறம் மூடுபனி வந்தது. வீதிகளிலெல்லாம் பனிக்கட்டிகள், வெள்ளிபோல் பிரகாசமாயும் உறைந்துபோயும் இருந்தன. வீட்டுத் தாழ்வாரங்களிலிருந்து மழைத் தண்ணீர் வடியும்போது பார்த்தால், நீண்ட பளிங்குக் கத்திகள் மாலை மாலையாய்த் தொங்கிக் கொண்டிருப்பதுபோல் தோன்றும். ஏழைக் குழந்தைகள் எல்லாரும் மிருதுவான ரோமத்தினால் செய்த பனிக் கம்பளிகளைப் போர்த்திக்கொண்டு, கணகணப்பாய் திரிந்தார்கள். சிறுவர்கள், தலையில் நல்ல சிகப்புத் தொப்பிகளைப் போட்டுக்கொண்டிருந்தார்கள். இரும்பு ஜோடுகளை காலில் மாட்டிக்கொண்டு உறைபனிக் கட்டிகளில் வழுக்கிச் சருக்கி விளையாடினார்கள். பனியில் வாடாமல் சந்தோஷமா யிருந்தார்கள்.


குருவியோ, பாவம்! குளிரினால் வாடியது.

அதற்கு வாடை தாங்க முடியவில்லை. இருந்தாலும், இளவரசனை விட்டுப் பிரிய குருவிக்கு மனமும் இல்லை; அதற்கு இளவரசனிடம் அவ்வளவு பிரியம். அங்கே ஒரு ரொட்டிக் கடைகாரன் இருந்தான். அவன் பராக்குப் பார்த்திருக்கும் சமயம் பார்த்து, அவன் கடையின் வாசல் கதவுகளுக்கு வெளியில் சிந்திக்கிடக்கும் ரொட்டித் துண்டுகளை, அவனுக்குத் தெரியாமல் கொத்திக்கொண்டு வந்து, குருவி தின்றது. சிறகை அடிக்கடி அடித்துக்கொண்டு, உடலுக்கு சூடு உண்டாக்கிக் கொண்டது.

சில நாட்கள் இவ்வாறு சென்றன. குருவி, "செத்துப்போய் விடுவோம்" என்று கடைசியாய் நினைத்தது. அதற்கும் தன்னை மரணம் நெருங்கி வந்துவிட்டதென்று தெரிந்தது. ஆதலால் சாகுமுன், இளவரசனுக்குக் கடைசியாக ஒரு முத்தம் கொடுக்க விரும்பியது. பறக்கவோ சக்தி யில்லை. இளவரசன் தோளில் பறந்து உட்காரத்தான் அதற்குக் கொஞ்சம் பலமிருந்தது. தோளில் உட்கார்ந்ததும் சிலையைப் பார்த்து, "இளவரசனே! உனக்கு வந்தனம். உன்னிடம் விடை பெற்றுக் கொள்ளு

கிறேன். உன் கையில் கடைசியாக ஒரு முத்தம் கொடுக்க ஆசைப்படுகிறேன். அதற்கு என்னை அனுமதிப்பாயா?" என்று சன்னக்குரலில் சிலையை மெதுவாகக் கேட்டது, குருவி. அதற்குச் சிலை, "குருவியே! இனிமேலாவது நீ எகிப்திற்குப் போவாய் என்பதை நினைத்து நான் சந்தோஷப் படுகிறேன். நீ இங்கே ரொம்ப காலம் தங்கிவிட் டாய். நீ என் கைகளைக் கொஞ்சவேண்டாம்; என் உதடுகளைக் கொஞ்சு; நான் உன்னிடம் அவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன்" என்றது சிலை.

இதைக்கேட்ட குருவி, "இளவரசனே! நான் இனி எகிப்திற்கு போகமாட்டேன். மரணம் என்ற வீட்டுக்குத்தான் போகிறேன். மரணம், தூக்கத்தின் சகோதரன் அல்லவா?" என்றது. இளவரசன் உதடுகளில் கடைசித் தடவையாக, குருவி முத்தமிட்டது: கொஞ்ச நேரத்திற்கெல் லாம், அவன் காலடியில் விழுந்து, இறந்தது! திடீரென்று, அந்தச் சமயம், சிலையின் உள்ளே இருந்து, நூதனமான ஒரு வெடிச் சத்தம் அதிர்ந் தது. ஏதோ படாரென்று தெறித்துப் போனது



மாதிரி கேட்டது. உண்மையில் நடந்தது என்ன வென்ருல், இளவரசனுடைய சிலையின் ஈய ஹிருதயத்தின்மேல் மூடிக்கொண்டிருந்த உறைபனிக் கட்டிதான், அப்படி பயங்கரமான சத்தத்துடன் இரண்டு துண்டுகளாக வெடித்தது!




11

அடுத்த நாள் காலையில், நகர சபைத் தலைவர், தமது அங்கத்தினர்களுடன், சிலைக்குக் கீழே யிருக்கும் சதுக்கத்தில் நடந்து போய்க் கொண்டிருந்தார்; ஸ்தூபியைத் தாண்டி வந்ததும், அதன்மேலிருந்த சிலையைப் பார்த்தார். அங்கத்தினர்களிடம் போய், "அன்பர்களே! பார்த்தீர்களா, இந்தச் சிலையின் அலங்கோலத்தை?" என்றார். "ஆம், அவ்வாறே சிலை அலங்கோலமாய்த்தான் இருக்கிறது" என்று அங்கத்தினர்கள், ஒத்துப் பாடினார்கள். பிறகு, எல்லாரும் ஸ்தூபிக்குமேல் ஏறிப்போய், சிலையை உற்றுப் பார்த்தார்கள். "சிலையின் உடைவாளில் இருந்த சிகப்புக்கல் விழுந்துவிட்டது. கண்களிலிருந்த நீலக் கற்களும் காணப்பட வில்லை; உடலில் இருந்த தங்கம் முழுதும் உறிந்து போய்விட்டது. இப்பொழுது இந்த இளவரசனைப் பார்த்தால், ஒரு பிச்சைக்

காரனைப்போல் தோன்றுகிறது" என்ருர் நகர சபைத் தலைவர். அப்படியே இருக்கிறது என்றனர், எல்லா அங்கத்தினர்களும். பிறகு தலைவர், "அங்கத்தினர்களே! பார்த்தீர்களா, இங்கு ஒரு குருவியும் செத்துப்போய்க் கிடக்கிறது. நாற்றம் எடுத்துப் போய்விட்டது. 'இப்படிக் குருவிகள், இங்கே செத்துக் கிடக்க எக்காரணத்தை முன்னிட்டும் அனுமதிக்க மாட்டோம்' என நகரசபை அறிக்கை ஒன்று வெளியிட வேண்டும்" என்று யோஜனை கூறினர்.

பிறகு, இளவரசனின் சிலையைப் பிடுங்கி, கீழேபோட்டு விட்டார்கள். இந்தச் சிலையைப் பார்த்தார், ஒரு சர்வ கலாசாலை பண்டிதர்: "இது இனி அழகாய் இருக்காது; இந்த இடத்தில் சிலையை வைத்துப் பிரயோசனமில்லை. வேறு இடத்திற்கு அதை அகற்றிவிடுங்கள்" என்ருர். உடனே சிலையை எடுத்துக்கொண்டுபோய் உலையில் போட்டு உருக்கிவிடும்படி உத்தரவிடப் பட்டது. உருக்கும் லோகத்தை என்ன செய்வதென்று தீர்மானிப்பதற்காக, நகரசபைக் கூட்டம் ஒன்றைத்




தலைவர் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் தலைவர், "அன்பர்களே! இளவரசன் சிலைக்குப் பதிலாக, அதே இடத்தில் வேறொரு சிலையை நாம் செய்து வைத்துவிட வேண்டும். அப்படி வைத்தாலும், என்னுடைய சிலையைத் தான் அங்கே வைக்க வேண்டும்" என்று சொன்னார். சபையில் இருந்த அங்கத்தினர்கள், அதை எதிர்த்து ஆரவாரம் செய்தனர். அங்கே இருந்த ஒவ்வொருவரும், 'தம் தம் சிலையைத்தான் வைக்கவேண்டும்' என்று தமக்குள் சண்டைபோட்டுக் கொண்டார்கள். அந்தச் சமயம், வார்ப்புச்சாலைத் தொழிலாளரின் மேஸ்திரி ஒருவன் அங்கே ஓடிவந்தான். "ஆ, என்ன ஆச்சரியம்! அந்தச் சிலையின் தெறித்துப் போன ஈய—ஹிருதயம், அப்படியே கல்லுப் போல் உலையில் உருகாமல் இருக்கிறது! அதை என்னால் உருக்கமுடியாது. ஆகையால், சிலையைத் தூர வீசி எறிந்துவிட வேண்டியதுதான்" என்று சொன்னான். அவன் அவ்வாறு சொல்லியதும், குருவி எங்கே செத்துப்போய்க் கிடந்ததோ, அதே குப்பை மேட்டில், இளவரசனுடைய சிலையையும்

வீசி எறிந்து விட்டார்கள்.

★ ★ ★

"நகரில் மிக விலையுயர்ந்த பொருள்களில் இரண்டை கொண்டுவா" என்று கடவுள் ஒரு நாள் தன் தேவதூதனுக்குக் கட்டளையிட்டார். தேவதூதன் எங்கும் தேடிப்போய்ப் பார்த்து, நகர மூலையில் உடைந்து கிடந்த இளவரசனின் ஈய ஹிருதயத்தையும், செத்துக்கிடந்த குருவியையும் கொண்டுவந்தான். கடவுள் பார்த்தார். "தேவதூதனே! நீ சரியான பொருள்களையே தேர்ந்து எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாய். ஏனென்றால், இந்தக் குருவி, என் சொர்க்கப் பூங்காவனத்தில் எப்பொழுதும் பாடிக்கொண்டே இருக்கும். இந்த "இன்பமுள்ள இளவரசன்" என் தங்க நகரத்தில் எப்போதும் என் புகழைப் பாடிக் கொண்டே இருப்பான்!" என்று தேவதூதனிடம் கூறினார்.



தங்கைகளே! தம்பிகளே!!

படித்தீர்களா! கதை எப்படி இருக்கிறது? "சிலையும் குருவியும்" என்ற இந்தக் கதையை எழுதியவர் யார் தெரியுமா? அவர் ஒரு பிரபலமான நாடக ஆசிரியர், கவிஞர், சிறந்த கதாசிரியர். அயர்லாந்தில் பிறந்தவர். பெயர் ஆஸ்கார் வைல்டு. சிலையும் குருவியும் என்ற இந்தக் கதைதான், ஆஸ்கார் வைல்டை உலக மேதை ஆக்கியது என்றால், இந்தக் கதையின் பெருமையைப் பற்றி நான் சொல்லக்கூடாதல்லவா? இதை உங்களுக்குத் தமிழாக்கித் தந்தவர், திருமயம் சு. நடராஜன்.

சென்னை,
1—1—'50

அணில் அண்ணன்

சென்னை, ராயப்பேட்டை சாந்தி பிரஸில் அச்சிடப் பெற்றது.
பதிப்புரிமை பெற்றது. முதல் பதிப்பு : 1950, ஜனவரி.

விலை அணா எட்டு.

சாந்தி பிரஸ், சென்னை 1.

கதைப் புத்தகங்கள்

★

முடியாது	அணில் அண்ணன் எழுதியது
மூன்று கேள்விகள்	,,
புஷ்கோட்	,,
டிரிங் டிரிங்	,,
சந்திர வளையம்	பஞ்சேரி ஈச்வரன்
அதிர்ஷ்ட தேவதை	'லக்ஷ்மி'
கிளிக் கோயில்	'குகப்ரியை'
மல்கோவா	பாலசுப்பிரமணியன்

ஒவ்வொன்றும் ஓரணா

★

அணில் வெளியீடு